**Dated : 04.06.2025**

**O.S.No. 311/2022**

**PW.1 – திரு. கமலநாதன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கினை நான் எதற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பணம் கொடுத்ததற்காக தாக்கல் செய்திருக்கிறேன். யாருக்கு எவ்வளவு பணம் எந்த தேதியில் நான் கொடுத்தேன் என்றால் சங்கீதா என்பவருக்கு ரூ.7.00 லட்சம் 23.11.2019 தேதியன்று கொடுத்தேன். பணத்தை எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்றால் நான் வசிக்கும் வீட்டில் வைத்து கொடுத்தேன். என்னுடைய வீடு மோகன்ராவ் காலனி 2வது தெருவில் கிருஷ்ணகிரியில் உள்ளது. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் நபர் என் மனைவியின் தங்கை. அவர் என் மனைவியுடன் உடன் பிறந்தவரா என்றால் இல்லை, அவருடைய சித்தி மகள். என் மனைவி கவிதாவின் சித்தி மகள் சங்கீதா. எந்த வகையில் அவர் சித்தி என்றால் என் மாமியாரின் சகோதரி. தற்போது சங்கீதாவுடன் எங்களுக்கு இனக்கமான உறவு உள்ளதா என்றால் தற்போது இந்த வழக்கு பிரச்சனையின் காரணமாய் சுமூகமான உறவு இல்லை.

எத்தனை வருட காலங்களாக எங்களுக்குள் சுமூகமான உறவு இல்லை என்றால் நான்கு வருடமாக இல்லை. கடந்த நான்கு வருடங்களாக எங்கள் வீட்டிற்கு சங்கீதா வருவதில்லை, நாங்களும் அவர் வீட்டிற்கு செல்வதில்லை. நான் கொடுத்த ரூ.7.00 லட்சம் தொகையை நான் டி.டி. ஆக கொடுத்தேனா அல்லது பணமாக கொடுத்தேனா என்றால் பணமாக கொடுத்தேன். ரூ.7.00 லட்சம் என்பவது மிகப்பெரிய தொகை அதனை நான் எப்படி கொடுத்தேன் என்றால் நான் வீட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து கொடுத்தேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்கிறேன். கடந்த 3 வருடமாக நான் அந்த தொழிலை செய்யவில்லை. இந்த டிரான்ஸ்போர்ட் தொழில் தவிர எனக்கு வேறு என்ன வருமானம் என்றால் எதுவும் இல்லை. பிராமிஸரி நோட்டு எழுதுவதற்கான ஆவணத்தை நான் எங்கு வாங்கினேன் என்றால் கடையில் வாங்கினேன். எந்த கடை என்று பெயர் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பிராமிஸரி நோட்டில் உள்ள கையெழுத்து சங்கீதா போட்டது தான். Ex.A1 பிராமிஸரி நோட்டில் காணப்படும் சங்கீதாவின் கையெழுத்திற்கும், பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் எதிரிருரையில் உள்ள சங்கீதாவின் கையெழுத்திற்கும்

வேறுபாடுகள் காணப்படுகிறது என்றால் சரிதான். சங்கீதா என்ன வேலை பார்க்கிறார் என்றால் ரேஷன் கடையில் வேலை பார்க்கிறார், அது அரசாங்க வேலை தான். அவருக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் சொந்த வீடு உள்ளது. சங்கீதாவிற்கு பணம் கொடுக்கும் போது ரூ.100/- பணம் கொடுத்தேனா அல்லது எப்படி கொடுத்தேன் என்றால் ரூ.500/- ரூபாய் தாள்கள் கொடுத்தேன். நான் அந்த பணத்தை கொடுக்கும் போது எவ்வளவு 500/- நோட்டுக்கள் எவ்வளவு 100/- நோட்டுக்கள் என்று கொடுத்தேனா என்றால் 1400 ஐநூறு ரூபாய் நோட்டுக்களை கணக்கிட்டு கொடுத்தேன்.

நான் டிராவல்ஸ் நடத்தினேன் என்று கூறியுள்ளேன், வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. சங்கீதா பணிபுரிந்து வருகிறார் அவருக்கு போதுமான பணம் உள்ளது, வசதியாக தான் இருக்கிறார், அவர் என்னிடம் பணம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அவர் வீடு கட்டுவதற்காக வாங்கினார். நான் கடையில் பிராமிஸரி நோட்டு வாங்கியதாக கூறுவது பொய், அதை நான் தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிராமிஸரி நோட்டில் உள்ள கையெழுத்து சங்கீதாவின் கையெழுத்தே அல்ல, பதிலுரையில் உள்ள கையெழுத்து தான் சங்கீதாவின் கையெழுத்து என்றால் அது சங்கீதாவின் கையெழுத்து தான். கடந்த 4 ஆண்டு காலமாக எங்களுக்கும், சங்கீதாவிற்கும் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இல்லை என்று நானே குறிப்பிட்டுள்ளேன், அப்படி இருக்கையில் என்னிடம் சங்கீதா கடன் வாங்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டிருக்காது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் நான் அந்த பணத்தை 5 வருடங்களுக்கு முன்னர் அவருக்கு கொடுத்தேன். இதன் காரணமாக தான் எங்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை.

நான் டிராவல்ஸ் எதுவும் நடத்தவில்லை, அதன் மூலமாக எனக்கு வருமானம் எதுவும் இல்லை, நான் வழக்கிற்காக வேண்டி டிராவல்ஸ் வைத்து நடத்தினேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு போதுமான வருமானமே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தாமே கூறுகிறார் எனக்கு மாதம் ரூ.30,000/- வருமானம் வந்தது. சங்கீதாவின் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது, ஆகவே நான் சங்கீதாவிற்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. புரோ நோட்டில் சங்கீதா போட்ட கையெழுத்திற்கும், எதிருரையில் உள்ள சங்கீதாவின் கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளதாக நானே ஒப்புக்கொண்ட நிலையில் புரோநோட்டில் உள்ள கையெழுத்து சங்கீதாவினுடையது என்று சொல்வதற்கு

நான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் வேண்டுமென்றால் நடவடிக்கை எடுக்கிறேன். சங்கீதாவை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்காததால் தான் எங்களுக்குள் பிரச்சனை. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.